www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# ளி



# முயற்சியின் உச்சியில்தான் முக்தி

ஞானம் 6 - ஒலி 22 - 28.05.2023



# தகுதியே தக்கன தரும்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய ஞான ஒலி இணைய இதழின் வாசகர்களே, உங்கள் அனைவரையும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

உயர்வானது தகுதிகளை வளர்த்துக் கொண்டோருக்குத்தான் கிடைக்கின்றது. அதுதான் நியாயம். முயற்சியும் வளர்ச்சியும் இணைந்தே ஆரம்பமாகும், வளரும். இரண்டும் அளவில் சரிசமமாகவே இருக்கும்.

முதலாம் வகுப்பிலிருந்து முனைவர் பட்டம் பெறும்வரை அல்லது மிகவுயர்ந்த கல்வி பெறும்வரை ஒருவருடைய தகுதி அவரின் உழைப்போடும் வளர்ந்து இரண்டும் விஷ்வரூபம் எடுக்கும்.

முயற்சியும் உயர்ச்சியும் இணைபிரியாது பயணிக்கும். இரண்டின தரமும், தகைமையும் இணையாய் இருக்கும்.

உடற்பயிற்சியும், மனப்பயிற்சியும், அறிவுத் தேடலும், திறன்கள் கற்றலும், உறவை வளர்த்தலிலும், ஆன்மீகத் தேடலிலும், ஞானப்பயிற்சியும், இந்த தனிமனிதப் பயிற்சியும், அதில் முன்னேற்ற முயற்சியும் யாரையும் உயர்த்தாமல் விடாது. அதனால்தான் ஒருவரின் தகுதியும், தரமும், தகைமையும் மாண்புறும்.

அந்தத் தகைமை உடையோர் இந்தப் பிரபஞ்ச ஆற்றலோடு நீக்கமற நிலைத்திடுவர். அவர்களில் இந்த பூலோக நாட்டங்கள் மறைந்து வானோக்கிய தேடலும், மனமும், நாட்டமும் தலைசிறந்தோங்கும். அவர்களுக்கு அனைத்து சித்தும் கிடைக்கும்.

ஒருவருக்கு அனைத்தும் அபரிமிதமாய் அளவில்லாமல் கிடைக்கும் போது, அவை அவருக்கு அற்பமாய்ப் போய்விடும். அவைகளால் அவருக்கு நிறைவு தராதுபோது. அவற்றைவிட வேறொன்றைத் தேட ஆரம்பிப்பார்கள். எது முழு நிறைவைத்தரும் என்ற தேடல் இருந்துகொண்டேயிருக்கும். நிறைவு தருவது கிடைத்தால் அவரின் தேடல் முற்றுப்பெறும். அதுதான் இறைவன் என்பதை அறியும்போதுதான் அவர் ஞானம் பெற்றவராவார்.

அற்ப நிறைவில் நிம்மதி

பெறுபவர்களின் தேடல் அதோடு நின்றுவிடும். அவர்களை இந்த அற்பங்கள் அடிமைப்படுத்திவிடும். அவர்களுக்கு ஈடேற்றம் என்பதே கிடைக்காது.

ஓர் அரசன் அனைத்தையும் அளவில்லாமல் பெற்று வாழ்ந்தார். மனைவிகள், பிள்ளைகள், பரந்துவிரிந்த பேரரசு, அதிகாரம்...இத்தியாதி இத்தியாதி எல்லாம் இருந்தும் அவருக்கு நிறைவு இல்லை. அந்தச் சூன்யத்தில்தான் இறைச்சிந்தனையில் மூழ்கினான். சதாகாலமும் இறைச் சிந்தனையோடும், தேடலோடும் வாழ்ந்தான். அவனின் மனம் எதிலும் நாட்டமில்லாது இறைவனை உண்மையாகத் தேடியதால் இறைவன் அவனுக்குக் காட்சி கொடுத்தார். அந்த அளவற்ற ஆனந்தத்தில் திளைத்த அவன், அந்த அனுபவத்தை தன் குடும்பம், அரசவையினர், மக்கள் அனைவருக்கும கொடுக்க வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினான். இறைவனும் அவனின் பிறரன்பை அறிந்து, சரி, நாளை அனைவரையும் அருகிலுள்ள மலைமீது ஏறி உச்சிக்கு வரச்சொன்னார். அதன்படி அரசரும், அவரின் குடும்பமும், அரசவையினர், மக்கள் அந்த மலைமீது ஏறினர்.

சிறிது உயரம் சென்றதும், நிறைய செம்புத் தாதுக்கள் இருந்தன. அதைக் கண்ட மக்கள் அந்தத் செம்புத்தாதை வெட்டி எடுக்கப்போய்விட்டனர். அரசன் மற்றவரை அழைத்துக்கொண்டு மலைமீது ஏறினார். மேலும் சற்று உயரம் சென்றதும், அந்த இடத்தில் எங்கும் வெள்ளி கொட்டிக்கிடந்தது. உடனே பலர் வெள்ளியை வெட்டி எடுக்கப்போய்விட்டனர். மீதமிருந்தோர் தொடர்ந்து மேலே ஏறினர், ஓரிடத்தில் எங்கும் தங்கம் நிறைந்திருந்தது. மந்திரிகள், செல்வந்தர்கள், அங்கேயே தங்கி தங்கம் வெட்டி எடுக்கப் போய்விட்டனர். அரசனோடு அவனது மனைவிகளும் பிள்ளைகளுமே இருந்தனர். அவர்கள் இறைவன் சொன்னபடி மலைமீது ஏறினர். இன்னும் சற்று உயரம் சென்றவுடன் அங்கே எங்கும் வைரமும், மாணிக்கக்கற்களும், வைடூரியங்களும் குவியல் குவியலாகக் கொட்டிக்கிடந்தன. அதைப்பார்த்த அரசனின் குடும்பத்தினர் அனைவரும் அதை அள்ளி எடுக்க ஓடிப்போய்விட்டனர். இறுதியாக அந்த அரசன் மட்டும் மலையுச்சிக்கு ஏறிச் சென்றார். அங்கே அவர் இறைவனைக் கண்டார். இறைத் தரிசனம் பெற்றார்.

உலகச் செல்வங்களை உதாசீனப்படுத்திவிட்டுத் இறைவன் தன்னை மட்டுமேத் தேடிவந்த அந்த அரசனுக்கு முழு ஞானத்தையும், அனைத்து நிறையையும் கொடுத்தார்.

அந்த அரசன் அந்த ஞானத்தோடும், இறைவனின் பிரசன்னத்தோடும் நாட்டை மிகச்சிறப்பாக வழிநடத்தினார்.


அரசன் இறைவனைத் தேடிப் போனார். அவனைச் சார்ந்தவர்களுக்கு அனைத்தையும் கடவுள் கொடுத்தார்.

அரசனும் நிறைவடைந்தார். அவனோடு அவனின் உறவுகளும் தங்களுக்கு எது தேவையோ அதை அவர்கள் பெற்றனர். அற்பங்களைத் தேடியவர்களுக்கு அற்பங்கள் கிடைத்தன. ஆசைதீராது எடுத்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால் உன்னதமானவரைத் தேடிச் சென்ற அரசன் மிக உயர்ந்த முயற்சியையும், உச்சியையும் அடைந்தான் அதற்கேற்ற மகத்துவத்தை, தான் அரசனாக இருந்தபோது இருந்த உன்னதத்தைவிட மஹோன்னதத்தைப் பெற்றார்.

கடவுள் யாருக்கும் எதையும் கேட்டவுடன் கொடுப்பதில்லை. கேளுங்கள் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விடும்படி கொடுக்கப்படும் என்றவர். மிகச்சிறந்த நிதிமான். தன் வலதுபுறத்தில் அமரும் தகுதியை இயேசு சிலுவையில் தகுதி பெற்றபிறகே தந்தார். நம் தகுதியை, உயர்த்தினால், தானாக வருவது வரும்........

# விவிலியம் அறிவோம்





## பாலைவனப் பயணத்திற்கான தயாரிப்பும் பாஸ்காவிழாவும்

உடன்படிக்கை நிகழ்விற்குப் பின் இஸ்ரயேல் மக்கள் ஏறக்குறைய ஓராண்டு காலம் சீனாய் பாலைவனத்தில் தங்கியிருக்கின்றனர். இந்தக் காலத்தில்தான் பொற்கன்றுக்குட்டியை வழிபடும் நிகழ்வும் நடக்கிறது. அதன்பின் மோசேஉடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். கடவுள் அவர்களுடன் தங்குவதற்காகத் திருஉறைவிடம் அமைக்கப்படுகிறது. திருஉறைவிடத்தை சுமந்து செல்வதற்காகவும் திருஉறைவிடத்தில் பணிபுரியும் குருக்களுக்கு உதவிகள் புரிவதற்காகவும் லேவியர்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்படுகிறார்கள். அதன்பின் தற்காலிகமாக கடவுளுக்காக தங்களை அர்ப்பணிக்க விரும்புவர்கள் செய்யவேண்டிய நாசிர் பொருத்தனைக்கான சட்டதிட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. அதைத்தொடர்ந்து 7 முதல் 10 முடிய வருகின்ற பிரிவுகளில் திருஉறைவிடம் எழுப்பி முடித்து அர்ப்பணிக்கப்பட்ட நாளில் நடந்த நிகழ்வுகள் பின்னோக்கிப் பார்க்கப்படுகின்றன. இந்த நிகழ்வுகள் பாலைவனப் பயணத்திற்கான தயாரிப்புகளாகும். சீனாய் பாலைவனத்தைவிட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்திற்காகத் தயாரிக்கும் நோக்கில்தான் திருஉறைவிடம் எழுப்பப்படுகிறது; மற்றும் பலிபீடம் திருப்பொழிவு செய்யப்படுகிறது. திருஉறைவிடமும் பலிபீடமும் அர்ப்பணிக்கப்பட்ட நாளில், கணக்கிடப்பட்டோர்க்கு மேற்பார்வையாளராய் இருந்த இஸ்ரயேல் தலைவர்கள்,அவர்கள் மூதாதையர் வீட்டுத்தலைவர்கள்,குலத் தலைவர்கள் ஆகியோர் காணிக்கைகள் கொண்டு வருகின்றனர். அவர்கள் ஆண்டவர் திருமுன் இரு தலைவர்களுக்கு ஒரு வண்டியும், ஒவ்வொருவருக்கும் ஒரு மாடுமாக ஆறு கூண்டு வண்டிகளையும், பன்னிரண்டு

மாடுகளையும் திருஉறைவிடத்திற்குத் தங்கள் காணிக்கைகளாகக் கொண்டு வந்தனர் (எண் 7:3) எனப் பார்க்கிறோம். மோசே அவைகளைப் பெற்று திருஉறைவிடத்தின் முக்கிய பகுதிகளை சுமந்து செல்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த கெர்சோனின் புதல்வர்களிடமும், மெராரியின் புதல்வர்களிடமும் கடவுளின் வழிகாட்டுதல்படி கொடுக்கிறார். கோகாத்தின் புதல்வர்கள் தோளில் வைத்துச் சுமக்கவேண்டிய புனிதப் பொருள்களைக் கவனிக்கும் பொறுப்பில் இருந்ததால் வண்டிகளும் மாடுகளும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

அவர்களைத் தொடர்ந்து பன்னிரு குலங்களைச் சார்ந்த தலைவர்களும் நாளுக்கு ஒருவராகதத் தங்கள் காணிக்கைகளைப் பலிபீட அர்ப்பணத்திற்காகக் கொண்டு வருகின்றனர். பன்னிரு நாள்கள் இந்தச் சடங்கு நடக்கிறது. பன்னிரு குலத்தின் தலைவர்களும் காணிக்கைகள் கொண்டு வருகின்றனர். இந்தப் பன்னிரு நாள் சடங்கையும் பார்க்கையில் இஸ்ரயேலின் பன்னிரு குலங்களும் கடவுள் முன்னிலையில் சமமானவர்களாகப் பார்க்கப்பட்டார்கள் என்பது தெரிகிறது. பன்னிரு குலத்தின் தலைவர்களும் ஒரே விதமான காணிக்கைகளையே கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர். அவர்கள் கொண்டுவந்த காணிக்கைகளில், ஒன்றரை கிலோகிராம் நிறையயுடைய வெள்ளித்தட்டு ஒன்று, எண்ணூறு கிராம் நிறையுடைய வெள்ளிக்கலம் ஒன்று; உணவுப் படையலுக்காக வெள்ளித்தட்டு மற்றும் வெள்ளிக்கலம் நிறைய எண்ணெயில் பிசைந்த மிருதுவான மாவு, நூற்றுப் பதினைந்து கிராம் நிறையுடைய பொன் பாத்திரம் ஒன்று, பொன்பாத்திரம் நிறையத் தூபம்; எரிபலிக்காக இளங்காளை ஒன்று, ஆட்டுக்கிடாய் ஒன்று, ஓராண்டு செம்மறிக்கிடாய் ஒன்று; பாவம் போக்கும் பலிக்காக வெள்ளாட்டுக்கிடாய் ஒன்று. நல்லுறவுப் பலி செலுத்துவதற்காக மாடுகள் இரண்டு, ஆட்டுக்கிடாய்கள் ஐந்து, வெள்ளாட்டுக்கிடாய்கள் ஐந்து, ஓராண்டு செம்மறிக்கிடாய்கள் ஐந்து ஆகியவை ஆகும். ஒவ்வொரு குலத்தின் தலைவர்களும் இந்த அளவில்தான் காணிக்கைகள் கொண்டுவந்தனர். குலத்தலைவர்கள் அனைவரும் காணிக்கைகள் அர்ப்பணித்தபின் மோசே திருஉறைவிடத்திற்குள் சென்று ஆண்டவருடன் பேசுகின்றார். ஆண்டவர் திருஉறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பேழையில் அமைந்துள்ள இரக்கத்தின் இருக்கையில் இருந்துகொண்டு மோசேயுடன் பேசுகின்றார்.

இதனைத் தொடர்ந்து ஆண்டவர் லேவியரைத் தேர்ந்தெடுத்ததையும் அவர்களுக்கான பணிகள் பகிர்ந்து கொடுக்கப்படுவதையும் எட்டாவது பிரிவு பதிவு செய்கிறது. சிறப்பாக, சீனாய் மலையிலிருந்து பயணம் தொடங்குமுன் பாஸ்கா விழா கொண்டாடப்படுகிறது (எண் 9:1–14). இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் பாஸ்கா விழா மிகவும் முக்கியமானது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று எகிப்து நாட்டைவிட்டு வெளியேறுவதன் அடையாளமாக

முதல் பாஸ்கா விழா கொண்டாடப்பட்டது. எகிப்திலிருந்து வெளியேறி ஓராண்டு முடிந்துவிட்டது. எனவே அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதன் நினைவாகவும் சீனாய் மலையில் ஆண்டவர் செய்த உடன்படிக்கைக்குப் பின் இஸ்ரயேல் மக்கள் ஓரினமாக பாலைவனப் பயணத்தைத் தொடங்குவதற்காகவும் ஆண்டவர் பாஸ்கா விழாவைக் கொண்டாடப் பணிக்கின்றார். பழைய ஏற்பாட்டில் பாஸ்காப் பெருவிழாக் கொண்டாடங்கள் ஒருசில இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கொண்டாட்டமும் இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க, முக்கியமான தருணங்கள். நாம் ஏற்கனவே அறிந்ததுபோல முதல் பாஸ்கா பெருவிழா எகிப்திலிருந்து வெளியேறுமுன் கொண்டாடப்படுகிறது. இரண்டாவது பாஸ்கா பெருவிழா சீனாய்ப் பாலைவனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தைத் தொடங்குமுன் கொண்டாடப்படுகின்றது. இந்த கொண்டாட்டம் பாலைவனப் பயணத்திற்கான ஒரு தயாரிப்பாக உள்ளது எனக்கூறலாம். மூன்றாவது பாஸ்கா கொண்டாட்டம் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்த பிறகு கொண்டாடப்படுவதாக விவிலியம் பதிவு செய்கிறது.

யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைகின்றனர். யோர்தான் ஆற்றைக் கடந்து கில்கால் என்னும் இடத்தில் தங்குகின்றனர். அங்கே பாஸ்கா பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர். சீனாய் பாலைவனத்தை விட்டகன்றபின் ஏறக்குறைய முப்பத்தொன்பது ஆண்டுகள் அவர்கள் பாலைவனத்தில் பயணிக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில் அவர்கள் பாஸ்கா விழா கொண்டாடினார்களா? என்பதுபற்றிய செய்திகள் எதுவும் விவிலியத்தில் பதிவு செய்யப்படவில்லை. வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபிறகு மூன்று தடவைகள் பாஸ்கா பெருவிழா கொண்டாடப்பட்டது என விவிலியம் பதிவு செய்கிறது. முதலாவதாக, எசேக்கியா யூதாவின் அரசனாக ஆட்சி செலுத்திய காலத்தில் கொண்டாடப்படுகிறது. இஸ்ரயேல் நாடு ஆசிரியர்களால் வீழ்ச்சியடைகிறது. இஸ்ரயேலில் வாழ்ந்த மக்களில் பலரும் அசீரியர்களால் நாடுகடத்தப்படுகின்றனர். ஒரு சிலர் யூதா நாட்டிற்குச் சென்று அடைக்கலம் தேடுகின்றனர். இன்னும் ஒரு சிலர் இஸ்ரயேலில் தொடர்ந்து வாழ்கின்றனர். இஸ்ரயேலில் விடப்பட்டவர்களோடு தொடர்பு ஏற்படுத்தவும் இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தும் நோக்குடனும் எசேக்கியா பாஸ்கா விழா கொண்டாட ஆணையிடுகிறார். பாஸ்கா விழா கொண்டாடப்படுகிறது (2 குறிப்பேடு 30). இரண்டாவதாக, அரசன் யோசியா தொடங்கிய சீர்சிருத்தங்களின் இறுதியாக பாஸ்கா பெருவிழாக் கொண்டாடப்படுகறிது (2 அரசர் 23; 2 குறிப்பேடு 35). மூன்றாவதாக, பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் திரும்பி வந்தபின் எருசலேம் கோவிலைச் சீரமைத்து புதிதாகக் கட்டுகிறார்கள். கோவில் வேலைகள் முடிந்து கோவில் அர்ப்பணிக்கப்படும்

நேரத்திலும் பாஸ்கா பெருவிழா கொண்டாடப்படுகிறது (எஸ்ரா 6:19-22). மேலும் பாஸ்கா பற்றிய அறிவுரைகளையும் சட்டதிட்டங்களையும் விப 34; லேவி 23; எண் 28 மற்றும் இச 16 ஆகிய பிரிவுகளிலும் வாசிக்கிறோம்.

ஆண்டவர் மோசே வழியாக பாஸ்கா பெருவிழாவைக் கொண்டாடக் கட்டளையிடுகிறார் (எண் 9:2-4); மக்கள் அதற்குக் கீழ்ப்படிந்து பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்குத் தயாரிக்கின்றனர். ஆனால் ஒரு பிரச்சினை எழுகிறது. பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்குத் தடையாக எவராவது தீட்டுப்பட்டவர்களாக இருந்தால் என்னசெய்வது என்ற கேள்வி எழுகிறது. அதற்குக் காரணம், கூட்டமைப்பில் ஒரு சிலர் ஒருவனுடைய பிணத்தைத் தொட்டதால் தீட்டுபட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாட விரும்புகிறார்கள். விதிமுறைகளின்படி அவர்கள் பாஸ்கா விழா கொண்டாடுவதற்குமுன் ஆண்டவருக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளைச் செலுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். தீட்டானவர்கள் கடவுளின் திருமுன்னிலையில் வரமுடியாது. எனவே அவர்கள் மோசேயிடமும் ஆரோனிடமும் வந்து தாங்களும் பாஸ்கா விழாவைக் கொண்டாட விரும்புவதைக் கூறுகிறார்கள். ஆண்டவருக்கான காணிக்கையைக் குறித்த காலத்தில் செலுத்த அனுமதி கேட்கிறார்கள். மோசே அவர்களிடம் ஆண்டவரிடம் கேட்டுக் கூறுவதாகச் சொல்கிறார். அதுவரைப் பொறுத்திருக்கக் கூறுகிறார் (எண் 9:6-8). ஆண்டவர் மோசேயுடன் பேசுகிறார். பல காரணங்களால் பாஸ்கா விழாவைக் கொண்டாட முடியாதவர்கள் பற்றிப் பேசுகிறார். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் பாஸ்கா விழாவைக் கொண்டாட வேண்டும். பாஸ்கா விழாதான் இஸ்ரயேல் ஒரு கூட்டமைப்பாக, ஒரு இனமாக மாறுவதற்கு காரணமாக இருந்தது. எனவே யாரும் பாஸ்கா விழாவைக் கொண்டாடாமல் இருக்கக்கூடாது. எந்தக் காரணத்திலாவது ஒருவர் பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்கு குறிக்கப்பட்ட முதல் மாதத்தில் தடை செய்யப்பட்டால் இரண்டாவது மாதத்தில் குறிக்கப்பட்ட நாளில் கொண்டாடலாம். பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்கு கடைபிடிக்க வேண்டிய எல்லா விதிமுறைகளை அவர்களும் கடைபிடிக்க வேண்டும். ஒருவன் பாஸ்கா விழாவைக் கடைபிடிக்கவில்லையென்றால் அவன் தன் மக்களிலிருந்து விலக்கப்பட வேண்டும். ஒருவன் தன் மக்களிலிருந்து விலக்கப்படுதல் இறப்பதற்குச் சமம். ஒருவன் பாஸ்கா விழாவைக் கொண்டாடவில்லையென்றால் அவன் ஏற்கனவே தனது அடையாளத்தை மறந்தவனாக தன் மக்களிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்டவனாகவே கருதப்படுவான்.

குறிக்கப்பட்ட காலத்தில் பாஸ்கா விழாவைக் கொண்டாட முடியாமல் இருப்பதற்கு மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன. அவை முறையே தீட்டுபட்டவர்களாக இருத்தல்,

பயணத்தில் இருத்தல் மற்றும் வேற்றினத்தவனாக இருத்தல். தீட்டுபட்டவர்கள் குறிப்பிட்ட நாள்களுக்கு பாளையத்திற்கு வெளியே தங்கியிருப்பர். குறிக்கப்பட்ட நாள்களுக்குப் பிறகு அவர்கள் வழிபாட்டுச் சடங்குகளில் பங்குகொள்ளலாம். மற்ற இரண்டு காரணங்களும் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபிறகு உருவாக்கப்பட்ட சட்டங்களாக தெரிகின்றன. பாஸ்கா விழா ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே கொண்டாடப்படும்போதுதான் பயணத்தில் இருப்பது ஒரு தடையாக வருகிறது. பாலைவனப் பயணத்தின்போதும், இஸ்ரயேல் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி ஒரு கூட்டமைப்பாக வாழ்ந்த காலங்களில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் பாஸ்கா விழா கொண்டாடப்பட்டது.

யூதாவின் அரசனான யோசியா ஏழாவது நூற்றாண்டில் கொண்டுவந்த சீர்திருத்தங்களுக்குப் பிறகுதான் எல்லா வழிபாடுகளும் எருசலேம் கோவிலில் நடத்தப்பட வேண்டும் என்ற விதிமுறைகள் வந்தன. பாஸ்கா விழாவும் எருசலேமில் மட்டுமே கொண்டாடப்பட்டது. வேற்றினத்தார் பாஸ்கா விழாவில் பங்குபெறுவதுபற்றிய விதிமுறைகளும் இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபிறகுதான் உருவாகின. பாலைவனப் பயணத்தின்போது இஸ்ரயேல் மக்கள் ஓரினமாகவே பயணிக்கின்றனர். ஐந்நூல்களை ஆய்வு செய்தால் அதில் காணப்படுகின்ற பல சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் உருவாக்கப்பட்டவையாக இருக்கலாம் ஆனால் அவை இஸ்ரயேல் சீனாய் பாலைவனத்தில் தங்கியிருந்தபோது உருவானவையாகக் காட்டப்பட்டிருக்கும்.

இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்தில் பாஸ்கா விழாவைக் கொண்டாடியபின் அவர்கள் சீனாய் பாலைவனத்திலிருந்து புறப்படுவதற்கு அடையாள முறையில் ஆண்டவர் அனுமதி கொடுக்கிறார். முக்கியமாக, கடவுளின் மாட்சியைப் வெளிப்படுத்தும் மேகம் திருஉறைவிடத்திலிருந்து விலகிச் செல்கிறது (எண் 9:15-23). குருக்கள் வெள்ளி எக்காளங்களை ஊதுவது இஸ்ரயேல் மக்கள் புறப்படுவதற்கு அடையாளமாக இருக்கிறது (எண் 10:1-10). இறுதியாக, தயாரிப்புகள் முடிவடைந்தபோது இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி போருக்குச் செல்வதுபோல் செல்கின்றனர் (எண் 10:11-35).

பயணம் தொடரும்,

அருள்பணி ஆ. அலெக்ஸ் cmf





# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஜஸ்டின் சேவியர் ராஜ்
பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்

## தூய ஆவியார் பெருவிழா ஞாயிறு

**28.05.2023**

**திருத்தூதர் பணிகள் 2/1-11 - 1 கொரிந்தியர் 12/3-7,12-13 - யோவான் 20/19-23**

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, நீண்ட மாதங்களுக்குப்பிறகு கனமழை பெய்தது. ஏரிகள், குளங்கள் நிரம்பி ஆறுகள் வழியாக தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது வழி தவறி, ஒரு முதலை மட்டும் ஏரியில் புகுந்தது. மற்ற முதலைகள் கடலில் சென்று சேர்ந்தன. அதன்பிறகு பல ஆண்டுகளாக மழையே இல்லை. தனிமையில் தவித்த அந்த முதலை எனது இனமெல்லாம் கடலில் சென்று சேர்ந்துவிட்டன. நான் மட்டும தனிமையில் மாட்டிக் கொண்டேன் என்று தனது சோகத்தை ஆமையிடம் சொன்னது அதற்கு ஆமை நம்பிக்கையோடு இரு, இன்னும் சில மாதங்களுக்குள் மழை வரும். ஏரி, குளமெல்லாம் நிரம்பி வழியும்போது தண்ணீரும் வழியும், மதகு அருகே தங்கிக் கொள். அதிக மழையால் ஏரி உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்து ஓடும். நீ ஆற்றோடு சேர்ந்து கடலில் சேர்ந்துவிடலாம் என்றது. அதேபோல் மழையும் வந்தது. முதலையும் தப்பி ஆற்று வெள்ளத்தில் அடிததுச் செல்லப்பட்டு கடலில் சேர்ந்தது.

இந்த நிகழ்வு சொல்லும் பாடம் என்னவென்றால், இறைச் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் வழி தவறும் போதும், தனிமை படுத்தப்படும்போதும் இறையுறவிலிருந்து பிரியும் போதும் மீண்டும் அவனை இறைவனோடு இணைக்கும் இணைப்புப் பாலமாக வழிகாட்டும் ஆளாக தூய ஆவியார் செயல்படுகிறார் என்பதாகும்.

இன்று தாய்த்திருச்சபையோடு இணைந்து நாம் பெந்தகோஸ்துப் பெருவிழாவைப் கொண்டாடி மகிழ்கின்றோம். இன்று நமது தாயாம் திருஅவை தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றது.

ஆண்டவர் இயேசு தான் சீடர்களுக்கு வாக்களித்தது போல, தான் உயிர்தெழுந்து விண்ணகம் சென்ற ஐம்பதாவது நாளில் தூய

ஆவியானவரைத் துணையாளராக தன் சீடர்கள் மீது பொழிகிறார். தூய ஆவியாரைப் பெறுவதற்கு முன்பு, சீடர்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள யூதர்களுக்கும், உரோமையர்களுக்கும் பயந்து, ஆண்டவர் இயேசுவைவிட்டு ஓடினார்கள். ஆண்டவர் இயேசுவை மறுதலித்தார்கள். இயேசுவே போய்விட்டார் இனிமேல் நமக்கு ஏன் இந்த வம்பு என்று எண்ணி, தங்கள் பழைய தொழிலுக்கேத் திரும்பினார்கள். ஆனால் எப்போது தூய ஆவியானவரைத் துணையாளராகப் பெற்றார்களோ அந்நேரம் முதலே, ஆண்டவர் இயேசுவுக்காகவும், அவரின் நற்செய்திக்காகவும், இறையாட்சிக்காகவும், எத்தகைய சாவையும் எந்நேரத்திலும் எதிர் கொள்வதற்குத் தயாராய் இருந்தார்கள். அந்த அளவிற்குத் தூய ஆவியானவர் அவர்களைத் திடப்படுத்தி, உறுதிப்படுத்தி, வழிநடத்தினார். உண்மையை வெளிப்படுத்துபவர் தூய ஆவியானவர். இயேசு கிறிஸ்து என்னும் உன்னதமான உண்மையை இவ்வுலகின் கடையெல்லைவரை வெளிப்படுத்த சீடர்களுக்குத் துணையாய் இருந்தவர் தூய ஆவியானவர்.

இந்த பெந்தேகொஸ்தே பெருவிழாவிலே தூய ஆவியின் துணையை நாமும் வேண்டுவோம். நமது தாயாம் திருஅவையை தூய ஆவியானவர் தொடர்ந்து வழிநடத்தவும், இயேசு கிறிஸ்து என்னும் உண்மையை உலகிற்க உரக்க பறைசாற்றவும், தூய ஆவியாரின் துணை நாடி இப்பெருவிழாத் திருப்பலியில் செபிப்போம். ஆமென்.




# தூய ஆவியார் பெருவிழா

திப. 2:1-11, 1கொரி. 12:3-7, 12-13,
யோவா. 20:19-23



28-05-2023



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்று அவரது அருங்கொடைகளால் ஆட்கொள்ளப்பட்ட அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் தூய ஆவியானவரின் பெருவிழாவில் பங்குகொண்டு பயனடைய அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று தாய் திருச்சபையானது தூய ஆவியானவரின் பெருவிழாவினை பெருமகிழ்வோடு கொண்டாடி மகிழ நம்மை அழைக்கிறது. இன்றைய தினத்தை இயேசுவின் உடலான திருச்சபையின் பிறந்த நாளாகவும் கொண்டாடி மகிழ்கிறோம்.

காற்று உயிருக்கு அடையாளம். நெருப்பு தூய்மைக்கு அடையாளம். நாக்கு பேச்சுக்கு அடையாளம். இம்மூன்றின் அடையாளமாய் இருப்பவர்தான் தூய ஆவியானவர். இறைவன் மனிதனுக்கு அளித்த கொடைகளில் சிறந்த கொடை, உன்னதமான கொடை தூய ஆவியே. தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் தூய ஆவியானவரின் அருளைப் பெற்று திருச்சபை தன் செயல்பாடுகளைப் புதுப்பிக்கவும், நாம் நம் இறை வாழ்வைப் புதுப்பிக்கவும் இந்நாளைப் பயன்படுத்துகிறோம்.

திசைமாறிச் செல்லும் மனிதனை நல்வழிப்படுத்தி இயேசுவிடம் அழைத்துச் செல்லும் மகத்தான பணியை சிறப்பாக செய்பவர்தான் தூய ஆவியானவர். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் இணைப்பு பாலமாக இருப்பவர்தான் தூய ஆவியானவர். கடவுளோடு நம்மை ஒருங்கிணைக்கும் ஒருங்கிணைப்பாளர் தான் தூய ஆவியானவர்.

அந்த தூய ஆவியானவரை திருவருட் சாதனங்கள் வழியே பெறுகின்ற பெரும் பேற்றை பெற்றுள்ள நாம் உலகின் இறுதி எல்லைவரை கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகர்வோம் என்ற உறுதியோடு அவரது திருவருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஐம்பதாவது நாள் என்று பொருள்படும் பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியார் திருத்தூதர்கள்மேல் இறங்கி திருச்சபையைத் துவக்கி வைக்கும் திருநிகழ்வு இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. ஆவியானவரின் தனிப்பட்ட ஆற்றலை திருத்துதர்கள் நிறைவாகப் பெற்று, பல மொழிகளில் பேசி திருச்சபையின் அகில உலகத் தன்மையை வெளிப்படுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

திருச்சபையைப் பற்றியும் திருச்சபையில் நிலவ வேண்டிய ஒற்றுமை பற்றியும் தூய பவுலடியார் எடுத்துரைக்கும் ஆழ்ந்த கருத்துக்கள் இன்றைய இரண்டாம் வாசகமாக வழங்கப்பட்டுள்ளது. தூய ஆவியானவரின் கொடைகள் வழியாக கிறிஸ்து நமக்கு அளித்துள்ள அடிப்படை மதிப்பீடுகளான ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை கட்டிக்காக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கும் இவ் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஆற்றலையும் கொடைகளையும் தந்து திருத்தூதர்களை உறுதிப்படுத்தி திருஅவையை நிறுவிய அன்பு இறைவா, உம் திருஅவையைக் கட்டிக் காத்து வழி நடத்தும் அதன் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். உம் தூய ஆவியாரின் வழியாக அனைத்து வரங்களையும் அவர்கள் மீது பொழிந்து ஆற்றலுடனும் ஆர்வத்துடனும் ஆரோக்கியத்துடனும் அவர்கள் திருப்பணி ஆற்றிட அருள் தர வேண்டுமென்று ஆண்டவரான இயேசுவின் உன்னத தூய ஆவியின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எங்கள் ஆருயிரும் அன்புமான தந்தையே இறைவா, எங்களது ஒவ்வொருவர் உள்ளத்திலும் உமது தூய ஆவியானவர் தங்கி ஆற்றலுடன் செயலாற்றி வருகிறார் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து நம்பிக்கையுடன் செயல்படவும், நாங்கள் எதிர்கொள்ளும் வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனைக்கும் அவர் வழியாக தீர்வு காணவும் அருள் தர வேண்டுமென்று ஆண்டவரான இயேசுவின் உன்னத தூய ஆவியின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, உம் திரு மகன் இயேசுவின் ஆவியால் திருமுழுக்கு பெற்ற நாங்கள் பொது நன்மைக்காக எங்களை நாங்களே அர்ப்பணித்து வாழவும், ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாமல் செயல்படவும், கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் வீரர்களாக வாழவும், ஆவியின் கனிகளால் நாங்கள் நிரப்பப்படும்போது திருச்சபையை நாங்கள் வலுப்படுத்துகிறோம் என்பதை உணர்ந்து வாழவும் வரமருள வேண்டுமென்று ஆண்டவரான இயேசுவின் உன்னத தூய ஆவியின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அன்பு இறைவா, எம்மை வழி நடத்தும் அரசியல் தலைவர்களை ஆசீர்வதியும். மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கும் எண்ணங்களை அவர்களுக்குத் தாரும். அவர்களின் உள்ளத்தில் உம் அன்புத் தீயை மூட்டும். சமூக நீதி, சமத்துவம், மத நல்லிணக்கம் போன்ற நற்குணங்களைக் கொண்டு நாட்டை ஆள அவர்களுக்கு வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரான இயேசுவின் உன்னத தூய ஆவியின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

மிருகத்தனமான உலகில்
அன்பாய் இருப்பது
பலவீனமல்ல, வீரம்

சுகபோகமாய், இடர்களின்றி வாழ்வது
ஒருவர் தன்னுடைய உண்மையான சக்திகளை
அறியாது சாவதற்கு வாய்ப்பாகிவிடும்
– டேவிட் காக்கின்ஸ்

மகிழ்ச்சியின் இரகசியம் விரும்புவதைச் செய்வது
வெற்றியின் இரகசியம் செய்வதை விரும்புவது

பொய்யாக நடிக்கத் தெரியாதவர்கள்தான்
கண்ணீரையும், கோபத்தையும் முதலில் வெளிப்படுத்துவார்கள்

தகுதியற்றவர்களைப் பற்றி சிந்திப்பதும்
கவலைப்படுவதும், நம்மை அவமதிப்பதற்குச் சமம்

தீயவர்கள் தாங்கள் காயப்படாமல் இருப்பதற்காக
நல்லவர்களை அடக்கி வைப்பார்கள்

அறிவிலிகள் திருந்துவதையும், திருத்தப்படுவதையும் விரும்பார்
ஞானிகள் திருத்திக்கொள்வதில் மகிழ்வர்

நீ மகிழ்ச்சியாகவே இருக்க வேண்டுமென்றில்லை
அநாவசியமாக வருத்தப்படாமல் இருந்தாலே போதும்
அதுவும் மகிழ்வைத் தரும்.



# திருப்பலி வாசகங்கள்

## பொதுக்காலம் 8ம் வாரம்

## 28.05.2023 முதல் 04.06.2023

**28.05.2023 – தூய ஆவி பெருவிழா – ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 2/1-11

1 கொரிந்தியர் 12/3-7, 12-13

யோவான் 20/19-23

**29.05.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – திங்கள்**

தொடக்க நூல் 3/9-15, 20 அல்லது

திருத்தூதர் பணிகள் 1/12-14

யோவான் 19/25-27

**30.05.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – செவ்வாய்**

சீராக்கின் ஞானம் 35/1-12

மாற்கு 10/28-31

**31.05.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – புதன்**
**புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் விழா**

செப்பனியா 3/14-18 அல்லது

உரோமையர் 12/9-16 - லூக்கா 1/39-56

**01.06.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – வியாழன்**

சீராக்கின் ஞானம் 42/15-25

மாற்கு 10/46-52

**02.06.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – வெள்ளி**

சீராக்கின் ஞானம் 44/1, 9-12

மாற்கு 11/11-26

**03.06.20233 – பொதுக்காலம் 8ம் வாரம் – சனி**

சீராக்கின் ஞானம் 51/12-20

மாற்கு 11/27-33


**04.06.20233 – பொதுக்காலம் 9ம் வாரம் – ஞாயிறு**

**மூவொரு கடவுள் பெருவிழா**

விடுதலைப் பயணம் 34/4-6, 8-9

2 கொரிந்தியர் 13/11-13

யோவான் 3/16-18



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 47

இயல்பினான் இல்வாழ்க்கைவாழ்;பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

### குறள் விளக்கம்

அறத்தின் இயல்பொடு இல்வாழ்க்கைவாழ்கிறவன் – வாழ முயல்கிறவன் பலதிறத்தாரிலும் மேம்பட்டுவிளங்குகிறவன் ஆவான்

### சிந்தனை

வயலில் தன் மகனைக் கடுமையாக உழைக்குமாறு தூண்டிக் கொண்டிருந்தார் அந்த மனிதர். வேலை இருக்கிறதோ இல்லையோ வயலில் இறங்கி ஏதாவது செய்யப் பணித்துக் கொண்டிருந்தார். பக்கத்து வயலைச் சேர்ந்தவர் பரிவோடு கேட்டார், இப்படியேவிட்டாலும் பயிர் நன்றாக வளரும் நிலைக்கு வந்துவிட்டதே! பையனை ஏன் படுத்துகிறீர்கள்? இவர் சொன்னார், நான் பண்படுத்த நினைப்பது வயலை அல்ல. என் மகனை! வினா எழுப்பியவருக்கு விவரம் புரிந்தது

இல்வாழ்க்கையின் இலக்கணம் உணர்ந்தவன் எங்கு சென்றாலும் வெற்றி பெறுவான். அனைத்து நிறைவையும் தன் வாழ்க்கை தர்மத்திலே அவன் பெற்றுவிடுவான். அறத்தோடு வாழும் ஒருவனது வாழ்க்கை ஒளி பொருந்தியதாக இருக்கும். அது நேர்மையினால் விளைந்த நேர்மறை எண்ணங்களாலும் நிறைந்திருக்கும் அதனால் அவன் தொட்டதெல்லாம் பொன்னாகும். எச்சூழலிலும் அவன் மேம்பட்டே விளங்குவான். இந்த நல்வாழ்வுக்கான பயிற்சியும் கடின முயற்சியும் சிறுவயதிலிருந்தே பெற்றோர்களால் குழந்தைகளுக்கு கற்றுத்தரப்பட வேண்டும்.

அத்தகைய நேர்மறையான வாழ்வையே புதையலுக்கு ஒப்பிடுகிறது திருவிவிலியம்.

ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றை கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தைவாங்கிக் கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும். மத் 13:44.

அத்தகைய வாழ்வுக்காக எதனையும் விட்டுக் கொடுக்க துணிகிறான். தனக்குள்ள எல்லாவற்றையும் விற்று அந்த மேன்மையான வாழ்க்கையை பெற்றுக்கொள்கிறான்.







நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலத்தகவல்..!
உடல் பலவீனத்தை போக்கி நலம் அளிக்கும் அருகம்புல்...!
அருகம்புல் உடலிலிருந்து நச்சுப் பொருட்களை அகற்றி
இரத்ததோட்ட மண்டலத்தை தூய்மைப் படுத்துகின்றது.
அனைத்து நோய்களுக்கும் மூலகாரணமான மலச்சிக்கலைப் போக்க
உதவுகின்றது.
அருகம்புல்லில் பச்சயம் பரிணமித்துள்ளது.
வாழ்வளிக்கும் உயிர் ஆற்றல்,
புரதம் கனிம உப்புக்கள் பலவும் உண்டு.
அருகம்புல்லை சேகரித்து நீரில் கழுவி நைய அரைத்து
பசும் பாலுடன் சேர்த்து சுண்டக் காய்ச்சி
நாள்தோறும் இரவில் படுக்கச் செல்லுமுன் சாப்பிட்டு வந்தால்
பலவினமடைந்த உடல் தேறி நல்ல பலம் பெற்றுவிடும்.
வளர்ந்து வரும் குழந்தைகள் எளிதாக ஊட்டச்சத்து பெற
இதே முறையைக் கையாளலாம்.
அருகம்புல் அமிலத்தன்மையைக் குறைக்கின்றது.
நரம்பு மண்டலத்திற்கு உறுதியும் ஊட்டமும் அளித்து
உடல் பலவீனத்தைப் போக்கும் ஆரோக்கியம் அளிக்கும் டானிக் ஆகச்
செயற்படுகின்றது.
அருகம்புல்லை நீரிலிட்டு நன்கு காய்ச்சி
அந்த நீரை பதமான சூட்டில் குடித்து வந்தால் இதயநோய்க்கு

இதமளிக்கும்.
திடீரென ஏற்படும் வெட்டு, காயம் போன்ற ரண காயங்களுக்கு
அரிவாள் மூக்கு என்று சொல்லப்படும் பச்சிலையையும்,
அருகம்புல்லையும் சம அளவாக எடுத்து
அரைத்துக் கட்டினால் உதிரப் போக்கு உடனடியாக நின்றுவிடும்.
காயமும் வெகு விரைவில் ஆறிவிடும்.
ஒரு பிடி அருகம்புல், மிளகு 10, சீரகம் சிறிதளவு சேர்த்து ரைத்து
பாலில் கலந்து குடிக்க,
உடலில் சேர்ந்துள்ள மருந்துகளின் நஞ்சினை அது போக்கிவிடும்.
அருகம்புல் ஒரு மருத்துவ மூலிகையாகும்.
வாதம், பித்தம், சளி(கபம்) ஆகிய முக்குற்றங்களினால் உண்டாகும்
நோய்கள்,
ஈளை, கண் புகைச்சல், குருதிப் பித்தம், சிறு நச்சுப் பூச்சிகளின் கடி
ஆகியவற்றுக்கு நல்லதொரு மருந்து.
குருதி தூய்மையடைய, வியர்வை நாற்றம் போக்க,
உடல் அரிப்பைப் போக்க, நமைச்சல் தீர,
வெள்ளைப்படுதல் நீங்க மருந்தாக உதவுகிறது.
காலையில் ஒரு தேக்கரண்டி அறுகம்புல் பொடியைச் சாப்பிட்டு நீர்
அருந்த வேண்டும்.
காலை உணவிற்கு ஒரு மணி நேரம் முன்னதாக இதனை
மேற்கொள்வது சிறந்தது.
இப்பொடியைத் தேனில் குழைத்தும் உட்கொள்ளலாம்.
குழந்தைகளும் பொடியை விழுங்குவது மிகவும் எளிய வழியாகும்.
நாளும் நலம் பெற்று வளமாக வாழ்வோம்.

நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.

ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063


# நூல் அறிமுகம்




நூலின் பெயர்:
என்னைப் பின்செல்: நற்செய்தி நூல்களில் சீடத்துவம்
நூலின் ஆசிரியர்:
அருட்பணிமுனைவர் ஆ. அலெக்ஸ் சிஎம்எஃப்
வெளியீடு:
கிளரீசியன் ஊடகப் பணியகம்,சென்னை.
விலை:
ரூபாய் 150.

திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் இயேசுவின் சீடர்களாக வாழவேண்டியவர்கள். இயேசுவின் போதனைகளையும் பணிவாழ்வையும் மையப்படுத்தி வாழ்வை அமைக்க வேண்டியவர்கள். நற்செய்தி நூல்களில் சீடத்துவம் என்ற இந்நூல் நான்கு நற்செய்தி நூல்களிலும் காணப்படும் சீடத்துவம் பற்றிய முதன்மையான கருத்துக்களை, எளிமையான நடையுடன் விளக்கமாகக் கூறுகிறது. இயேசு தனது சீடர்களுக்குக் கொடுத்த பயிற்சிகளையும் போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சீடர்கள் எத்தகைய அறநெறிகளையும், விழுமியங்களையும் பின்பற்றவேண்டும் எனக் கூறுகிறது.

சிவகங்கை மறைமாவட்ட மேனாள் ஆயர் செ. சூசைமாணிக்கம் அவர்களின் கருத்துப்படி, கிறிஸ்துவின் மனநிலைக்கு ஏற்ப சீடத்துவ வாழ்க்கை வாழஉதவும் வழிகாட்டியாக அமைந்துள்ளது இந்நூல் - சவால்களும், நெருக்கடிகளும் கிறிஸ்தவர்களை அச்சுறுத்தும் இக்காலகட்டத்தில், கிறிஸ்தவ வாழ்வில் நாட்டம் கொண்டோர் அனைவருக்கும் இந்நூல் துணையும் தூண்டுதலுமாய் இருக்கும்.




இந்நூலைப் பெற்று பயனடைய விரும்புபவர்கள்
கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளலாம்.
கிளரீசியன் ஊடகப் பணியகம்,
த.பெ.எண் 43,பாரதிநகர் முதல் தெரு,
ஜோதிநகர், மேற்குதாம்பரம்,சென்னை-600 045.
தொலைபேசி: 044 - 2226 0825,
அருள்பணி ச. இஞ்ஞாசியார் CMF
9486645393
அருள்பணி ஆ. ராயப்பன் CMF 8940118893
மின்னஞ்சல்:
artsmediacmf@gmail.com;
claretian.communications@yahoo.com
YouTube: Claretian Communications